**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, யூன்- 2017
## Term Examination, June - 2017

FWC

| தமிழ் I | தரம் :- 13 (2017) | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

**அறிவுறுத்தல்கள் :**
**பகுதி I இல் உள்ள மூன்று வினாக்களுக்கும் பகுதி II இல் உள்ளவற்றுள் எவையேனும் இரண்டு வினாக்களிற்கும் எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

### பகுதி – I

**1) பின்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.**

(i). நினையாய் வாழி தோழி நனைகவுள்
அண்ணல் யானை அணிமுகப் பாய்ந்தென
மிகுவலி யிரும்புலி பகுவாயேற்றை
வெண்கோடு செம்மறுக் கொளீ இ விடர்முகைக்
கோடையொற்றிய கருங்கால் வேங்கை
வாடுபூஞ்சினையிற் கிடக்கும்
உயர் வரை நாடனொடு பெயருமாறே.

அ) இச் செய்யுட்பகுதியின் பொருளை இக்கால உரைநடையில் எழுதுக?
ஆ) பாட்டுடைத் தலைவனின் நாட்டுச் சிறப்பு சித்தரிக்கப்படுமாற்றை விளக்குக?
இ) இச் செய்யுளில் கையாளப்பட்டுள்ள உவமையணியை விளக்குக?

(12 புள்ளி)

(ii). தூபம் முற்றிய கார் இருள் பகைதுள்ளி ஓடிட உள்எழும்
தீபம் முற்றும் நீர்த்து அகன்றெனச் சேயது ஆருயிர் தேய்தலால்
பாபம் முற்றிய பேதை செய்த பகைத்திறனில் வெய்யவன்
கோபம் முற்றி மிகச் சிவந்தனன் ஒத்தனன் குணகுன்றிலே.

அ) செய்யுளில் கூறப்படும் காட்சி யாது? அது எவ்வாறு வர்ணிக்கப்படுகிறது?
ஆ) வெய்யவன் எனக் குறிப்பிடப்படுபவன் யார்? அவனது செயல்கள் யாவை?
இ) இச் செய்யுளில் கையாளப்பட்டுள்ள அணிகளை விளக்குக?

(12 புள்ளி)

2) **„அ' பகுதியிலுள்ள கவிதையை படித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.**

**அல்லது**

**„ஆ' பகுதியிலுள்ள உரைப்பகுதியைப் படித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடைதருக.**

அ) காரிருள் அகத்தில் நல்ல கதிரொளி நீதான் இந்தப்
பாரிடைத் துயில்வோர் கண்ணிற் பாய்ந்திடும் எழுச்சிநீதான்
ஊரினை நாட்ட இந்த உலகினை ஒன்று சேர்க்கப்
பேரறிவாளர் நெஞ்சிற் பிறந்த பத்திரிகைப் பெண்ணே!

அறிஞர்தம் இதயஓடை ஆழநீர் தன்னை மொண்டு
செறிதரும் மக்கள் எண்ணம் செழித்திட ஊற்றி ஊற்றிக்
குறுகிய செயல்கள் தீர்த்துக் குவலயம் ஓங்கச் செய்வாய்
நறுமண இதழ்ப் பெண்ணே உன் நலம் காணார். ஞாலம் காணார்.

கரும்புதர் விலக்கிச் சென்று களாப்பழம் சேர்ப்பார்போல்
நெடும்புவி மக்கட்கான நினைப்பினிற் சென்று நெஞ்சிற
படும்பல நுணுக்கம் சேர்ப்பார். படித்தவர். அவற்றை எல்லாம்
„கொடும்' என அள்ளி உன்தாள் கொண்டவர்க்குக்கொண்டு போவாய்

வானிடைநிகழும் கோடி மாயங்கள் மாநிலத்தில்
ஊனிடை உயிரில் வாழ்வின் உட்புறம் வெளிப்புறத்தே
ஆனநற் கொள்கை அன்பின் அற்புதம் இயற்கைக் கூத்துத்
தேனிதழ் தன்னில் சேர்த்துத்தித்திக்கத் தருவாய் நித்தம்

சிறுகதை ஒன்று சொல்லிப் பெருமதியூட்டும் தாளே!
அறைதனில் நடந்தவற்றை அம்பலத்திழுத்துப் போட்டுக்
கறையுளம் தூய்மை செய்வாய், களைப்பிலே ஊக்கம் பெய்வாய்
நிறைபொருள் ஆவாய் ஏழை நீட்டிய வெறுங்கரத்தே.

ஓவியம் தருவாய் சிற்பம் தருவாய் கவிதையூட்டக்
காவியம் தருவாய் மக்கள் கலகலவெனச் சிரிப்பு
மேவிடும் விகடம் சொல்வாய், மின்னிடும் காதல் தந்து
கூவுவாய், வீரப் பேச்சுக்கொட்டுவாய் கோலத்தாளே!

தெருப் பெருக்கிடுவோர்க்கும் செகம்காக்கும் பெரியோர்க்கும் கை
இருப்பில் பத்திரிகை நாளும் இருந்திடல் வேண்டும் மண்ணில்
கருப்பெற்று உருப்பெற்று இளநடைபெற்றுப் பன்னர் ஐந்தே ஆண்டு
வரப்பெற்றார், பத்திரிகை நாளும் உண் டென்றால் வாழ்க்கை பெற்றார்.

(1) பத்திரிகைப் பெண்ணின் செயற்பாடுகள் எவை?

(2) பத்திரிகை எவற்றை எமக்கு எடுத்துத் தருகின்றது?

(3) இக்கவிதை மூலம் வெளிப்படும் சமத்துவக் கொள்கையை விளக்குக?

(4) இங்கு கையாளப்பட்டுள்ள அணிகளை எடுத்துக் காட்டி விளக்குக?

(16 புள்ளி)

**அல்லது**

ஆ) ''லெட்சுமி! உங்க எல்லோருக்கும் நல்லாத் தெரியும். கணக்குப் பிள்ளைகளுக்கு ,,பொம்புளைகேஸ்' எவ்வளவு ஆபத்தானதுன்னு. அதிலேயும் நான் கல்யாணம் கட்டாதவன் அப்படிப்பட்டவங்களுக்கு சும்மா கட்டுக்கதையைக் கட்டி விட்டாக்கூட நெசம்னு எங்க மேலிடம் நம்பும். இது உனக்கு நல்லாத் தெரியும். உன்னை விட நல்லா எடுக்கக்கூடிய ஆளுக உனக்கு முந்தியே பேரு பதிஞ்சு எத்தனையோ வருஷம் ,சர்வீசு' உள்ள ஆளுக இங்கே இருக்கு. அவுகளை எல்லாம்விட போன வருஷம் வேலைக்கு வந்த நீ ஐம்பத்திஏழு றாத்தல் எடுத்தது எல்லோருக்கும் ரொம்ப சந்தேகத்தைக் குடுத்திருக்கு. ஆனா இன்னும் யாராவது என்கிட்டே நேரே கேட்கலை அவுங்களுக்குள்ளே பேச்சு நடக்குதாம்.........''

''............ இப்ப அது கிடந்திட்டு போகுதுங்க........'' ''இல்லை கங்காணி! நான் இந்த மாதிரி ,பப்ளிக' கா விசாரிக்கப்படாது. தான் ஆனா விஷயம் என் சம்பந்தப்பட்டது. அதனாலே தான் ,ஒடச்சு பேச விரும்புகிறேன். அத்தோட லெட்சுமி எங்களுக்கு சொந்தகாராச்சின்னு ஒரு பிரச்சினை இருக்கு அதனாலே தான் ஒடச்சி பேச நினைக்கின்றேன்......'' லெட்சுமி பக்கம் திரும்பினார். ,,லெட்சுமி' என் நிலைமை புரியும்னு நினைக்கிறேன். உன்னாலே மறுபடியும் எடுத்துக்காட்ட முடியுந்தானே?''

குனிந்திருந்த தலை சட்டென்று நிமிர்ந்தது. ஐயாவை கங்காணியை அப்பறம் ஆட்களை ஒருமுறை சிலிர்த்து பார்த்தது. தூங்கிக் கொண்டிருக்கும் புலியை விலாவில் குத்தினால் இப்படித்தான் துள்ளி எழுந்து முறைத்திருக்கும்.

''என்ன புள்ளே மொறைக்கிறே! ஐயா கேட்டதுக்கு வதிலு சொல்லு?''

''எதைச் சொல்வது? ,ஐயா' பூடகமாகப் பேசிவிட்டு சும்மா இருந்து விட்டால். அந்தக் ,கறை' நீங்கி விடுமா?'' ஐயா முகத்தை ஏறிட்டு வெறித்துப் பார்த்துச் சொன்னாள் லெட்சுமி :

''யாரு முடியாதுன்னா? என்னாலே எடுக்கமுடியும் எடுத்துக் காட்றேன்''. பொங்கி வந்த கண்ணீரை மறைப்பதற்காகத் தலை குனிந்து கொண்டாள். மேட்டிலிருந்து பள்ளத்துக்கு சரேலென இறங்கும் சாரைப் பாம்பு மாதிரிக் கண்ணீர் வழிந்தது. குழுமிநின்ற ஆட்கள் மௌனமாக நடப்பைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள். உள்ளுக்குள்ளே ,என்ன தான் நடக்கிறது பார்ப்போம்' என்கிற மனநிலை இருந்தாலும், வெளிக்குப் ,பசு' வாக நின்று கொண்டிருந்தார்கள்.

(1) இந்த உரைப்பகுதியில் ஐயாவின் நேர்மையுணர்வுகள் எடுத்துக் காட்டுமாற்றை விளக்குக.

(2) லட்சுமியின் பெண்மைத்தன்மையும், அவளது கடமையுணர்வையும் ஆசிரியர் எவ்வாறு சித்தரிக்கின்றார்?

(3) ,தூங்கிக் கொண்டிருக்கும் புலியை விலாவில் குத்தினால் இப்படித்தான் துள்ளி எழுந்து முறைந்திருக்கும்' இத்தொடர் மூலம் உணர்த்தப்படுவதை விளக்குக?

(4) இவ்வுரைப் பகுதியில் இடம் பெறும் பேச்சுத் தமிழ் பற்றி கருத்துரை வழங்குக?

(16 புள்ளி)

## பகுதி – II

3) **"அவை அஞ்சாமை" என்ற அதிகாரத்தில் வள்ளுவர் கூறியுள்ளவற்றை ஆதாரமாகக் கொண்டு பின்வருவனவற்றிற்கு விடை தருக.**

அ) அவை அஞ்சாதவரது சிறப்பு

ஆ) அவர்கள் மேற்கொள்ள வேண்டியவை

இ) அவை அஞ்சாதவரது இழிவு

(20 புள்ளி)

4) **கைகேயி சூழ்வினைப் படலத்தில் இராமன் தசரத மன்னன் அரண்மனை சென்றடைந்தது முதல் கைகேயியின் கட்டளையை ஏற்றது வரையிலான பகுதியினூடாக பின்வருவனவற்றை விளக்குக.**

அ) மன்னனைக் காணாது நின்ற இராமனின் செயல்

ஆ) இராமனின் செயல் கண்டு முனிவர்களின் எண்ணம்

இ) கையேயியின் வருகையும் கட்டளையும்

ஈ) இராமனின் பணி மொழியும் முகப்பொலிவும்

(20 புள்ளி)

5) **"தாய்" என்னும் சிறுகதையினூடகப் பின்வருவனவற்றை விளக்குக.**

அ) ஒரு தாயின் தாய்மை உணர்வு வெளிப்படுமாற்றை விளக்குக.

ஆ) மகளின் சுயநலப் போக்கும் போலியான அன்பும்

இ) மூதூர்ப் பிரதேச வழக்குகள்

ஈ) கதையில் வாத்தியார் என்னும் பாத்திரம் பெறும் முக்கியத்துவம்

(20 புள்ளி)

6) **சீறாப்புராணம் மழையழைப்பித்த படலத்தினூடாக பின்வருவனவற்றை விளக்குக.**

அ) வரட்சியினால் மக்கள் அடைந்த துன்பம்

ஆ) நபிபெருமான் இறைவன் மீது கொண்ட கிருபை

இ) மழைமேகம் கருக்கொண்டமையை உமறுப்புலவர் எடுத்துக்காட்டும் சிறப்பு

ஈ) இஸ்லாமிய மதப் பண்பாடுகள்

(20 புள்ளி)

7) **சுவாமி விபுலானந்தரின் பாரதிபாடல் என்ற கட்டுரையை ஆதாரமாகக் கொண்டு,**

அ) உத்தமகவிகளின் பாடல்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ள கருத்துக்களை துலக்குக.

ஆ) கட்டுரை ஆசிரியரை பாரதியார் கவர்ந்தமைக்கான காரணங்களை தெளிவுபடுத்துக.

இ) கண்ணன் பாட்டில் அவர் கொண்ட ஈடுபாட்டுக்கான காரணங்களை ஆராய்க.

(20 புள்ளி)

8) **மேல்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை விளக்குக.**

அ) சுந்தரரின் சீபர்பதப்பதிகத்தினூடாக அவரது பக்திநெறி.

ஆ) மணிமேகலையில் புத்தபீடிகையை வணங்கிய மணிமேகலை கூறிய செய்திகள்.

இ) பூக்காரி எனும் கவிதையில் பிச்சமூர்த்தி கூறவந்த செய்தி.

ஈ) நீண்ட பயணம் நாவலில் செல்லத்துரையனுக்கும் சரஸ்வதிக்கும் இடையில் ஏற்பட்ட உறவை ஆசிரியர் வெளிப்படுத்தும் பாங்கு.

(20 புள்ளி)

FWC

# வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
# Field Work Centre
# தவணைப் பரீட்சை, யூன்- 2017
# Term Examination, June - 2017

| தரம் :- 13 (2017) | தமிழ் - II | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

அறிவுறுத்தல்கள் :

- ❖ பகுதி I இல் உள்ள மூன்று வினாக்களையும் பகுதி II இல் "அ" பிரிவிலிருந்து ஒரு வினாவையும் "ஆ" பிரிவிலிருந்து ஒரு வினாவையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.
- ❖ முதலாம் வினாவின் "அ" பகுதியிலுள்ள இருபது வினாக்களும் தனியாக தரப்பட்டுள்ளன. அவற்றுக்கான விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதி அதனை உமது ஏனைய விடைத்தாள்களின் மேல் வைத்து இணைத்துக் கொடுக்கவும்.

## பகுதி – I

01) (அ) எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

ஒவ்வொரு கூற்றுக்கும் கீழே ஐந்து வினாக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப்பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

The National e-learning Portal for The General Education

1. பின்வருவனவற்றுள் நாமுன்னுயிர் எழுத்து.
   (1) இ (2) ஆ (3) ஒ (4) ஊ (5) அ (……)

2. பின்வருவனவற்றுள் ஈரிதழ் வெடிப்பொலி.
   (1) க் (2) ப் (3) ச் (4) ட் (5) த் (……)

3. உயிரள பெடையின் தொகை.
   (1) 32 (2) 7 (3) 21 (4) 90 (5) 30 (……)

4. ஐ, ஔ ஆகிய எழுத்துக்களுக்குரிய இன எழுத்து முறையே.
   (1) ஈ, உ (2) உ, இ (3) இ, ஊ (4) ஈ, ஊ (5) இ, உ (……)

5. தமிழ் நெடுங்கணக்கிலுள்ள குறில் எழுத்துக்களின் எண்ணிக்கை.
   (1) 90 (2) 126 (3) 95 (4) 133 (5) 72 (……)

6. நெடித் தொடர்க் குற்றியலுகரம் அமைந்துள்ள சொல்.
   (1) தராசு (2) பாடு (3) ஏழு (4) பயறு (5) படு (……)

7. பின்வருவனற்றுள் பகுதி இரட்டித்துக் காலம் காட்டிய சொல்.
   (1) வந்தான் (2) சுட்டான் (3) ஓடியது
   (4) சென்றார் (5) ஓடினான் (……)

8. பின்வருவனற்றுள் காலம் காட்டாத இடைநிலையாக அமைவது.
   (1) ஞ் (2) த் (3) கின்று (4) ப் (5) இன் (……)

9. பின்வருவனவற்றுள் ஆக்கப்பெயராக அமையாதது.
   (1) நோயாளி (2) வருகை (3) முதலாளித்துவம்
   (4) புத்திசாலி (5) நீரேரி (……)

10. மூன்று நாளில் திரும்பி விடுவேன் இங்கு இல் உரு பு உணர்த்தும் பொருள்
(1) அடைதல் (2) இடம் (3) காலவரையறை
(4) நீங்கல் (5) ஓரிடம் நோக்கி நகர்தல் (......)

11. கூட்டுவினையடி அமைந்த சொல்
(1) வந்திருந்தேன் (2) எடுத்துவைத்தான் (3) சீரழிந்தது
(4) தந்தியடி (5) வந்திருக்கின்றார் (......)

12. பொது மொழியாக அமைந்த சொல்.
(1) பொன்முடி (2) தாமரை (3) தண்ணீர்
(4) நிலங்கடந்தான் (5) இராப்பகல் (......)

13. ஊதுவத்தி என்பது எந்த மொழிச் சொல்.
(1) மலையாளம் (2) ஆங்கிலம் (3) உருதுமொழி
(4) போர்த்துக்கேயம் (5) கிரேக்கம் (......)

14. பின்வருவனவற்றுள் குற்றியலுகரப் புணர்ச்சியாக அமைந்த சொல்.
(1) கிளியை (2) அப்பாவோடு (3) குருவிக்கூடு
(4) பட்டாடை (5) பலாவிலை (......)

15. "பாலோ பழமோ தா" இத் தொடரில் ஓகாரம் உணர்த்திய சொல்.
(1) ஐயம் (2) விகற்பம் (3) தெரிநிலை
(4) எதிர்மறை (5) பிரிநிலை (......)

16. தினமும் இட்லியும் தோசையும் சாப்பிட்டு எனக்கு நாக்கு செத்துப்போய் விட்டது. இவ் வாக்கியத்தில் நாக்கு செத்துப்போய் விட்டது என்பது.
(1) மரபுத்தொடர் (2) எச்சத்தொடர் (3) நிரப்பித்தொடர்
(4) வினைத்தொடர் (5) தனிவாக்கியம் (......)

17. கருத்தாவாகு பெயர் இடம்பெற்றுள்ள தொடர்.
(1) தாமரை ஓடினான் (2) ஊர் அடங்கியது (3) விளக்குமுரிந்தது.
(4) வெள்ளை உழுதது (5) திருவள்ளுவர் படித்தான் (......)

18. ,வாறாக தொரைச்சாணி அம்மா! வாங்க இப்படித்தான் விடிஞ்சுதோ? மொகறையைப் பாரு! இது.
(1) மலையகப் பேச்சு வழக்கு
(2) யாழ்ப்பாண பேச்சு வழக்கு
(3) மட்டக்களப்பு பேச்சு வழக்கு
(4) கிராமப் பேச்சு வழக்கு
(5) சென்னைப் பேச்சுத் தமிழ் (......)

19. பின்வருவனவற்றுள் வழுவற்ற வாக்கியம்.
(1) ஒவ்வொரு பூக்களுமே சொல்கிறதே.......
(2) ஒரு கடிதம் எழுதினேன்.
(3) ஆசையில் ஓர் கடிதம்.
(4) ஒரு ஊரில் ஒரு இராசா இருந்தார்.
(5) மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் (......)

20. இருபதாவது ஆண்டில் எடுக்கப்படும் விழா.
(1) மரவிழா (2) தசாப்தவிழா (3) வெள்ளிவிழா
(4) பூவிழா (5) பீங்கான்விழா (......)

**ஆ) பின்வரும் ஐந்து வினாக்களுக்கும் சுருக்கமான விடை தருக.**

(1) பொது மொழி என்றால் என்ன உதாரணம் தந்து விளக்குக.

(2) செய்து என்னும் எச்சம் வாக்கிய இணைப்பில் பயன்படுமாற்றை விளக்குக.

(3) தன்மை, முன்னிலைப் பெயர்கள் வேற்றுமை உருபு ஏற்கின்ற போது அடையும் மாற்றங்களைத் தருக?

(4) மாற்று வினா இணைப்பு வாக்கியத்திற்கு உதாரணம் தந்து விளக்குக?

(5) உயிர்முன் உயிர் புணரும் போது ஏற்படும் மாற்றத்தை உதாரணம் தந்து விளக்குக?

(2x5=10 புள்ளி)

**02) (அ) பின்வரும் உரைப்பகுதியை 50 சொற்களில் சுருக்கி எழுதுக.**

வாழ்க்கை என்பது ஊன், உடை, உறையுள் முதலியவற்றைக் தேடிப்பெறும் முயற்சியில் தொடங்குவது. சமைத்து உண்ணல், நெய்து உடுத்தல், வீடு அமைத்து வாழ்தல், தற்காப்புக்காக பற்பல கருவிகள் இயற்றிக் கொள்ளல் முதலியன வாழ்க்கையின் முதற்படியில் நிகழ்வன. அந்நிலையில் பொருளே வாழ்க்கையின் நோக்கமாகவும் நாட்டமாகவும் அமையும் பொருளால் அதாவது ஊண், உடை முதலியவைகளால் இன்பம் பெற முயன்று அலைந்து அலைந்து வாடிய பின், மக்கள் வாழ்க்கையின் இரண்டாம் படியினை எய்துவர். உண்ணும் உணவுக்கும், உடுக்கும் உடைக்கும் இருக்கும் இடத்திற்கும் போராட வேண்டிய வறுமையில் சிக்குண்டு வருந்தும் மக்கள் இரண்டாம் படியினை எய்தார். கஞ்சிக் கவலை மிகுந்த நாட்டில் கலைக்கவலை எழாது. கடவுட் கவலையும் தோன்றாது. பசித்துன்பம் அலைக்கும் நாடு பண்பாடு எய்தாது. வேண்டிய உணவும் பெற்று, உடையும் பெற்று, இடம் முதலியனவும் பெற்றவரே இரண்டாம் படியை எய்தும் தகுதி வாய்ந்தவர். தமிழ்ச் சான்றோர் ஊர்களைப் புகழத்தொடங்கிய போது, மாடமாளிகையும் பிளவும் பற்றிப் புகழ்ந்துரைத்தலின் ஊக்கங் கொள்ளாமல் ,,பசி என்பது அறியா ஊர்கள்' என்று புகழ்ந்த திறன் போற்றத்தக்கது. ஆதலின் வறுமை அற்ற நாடே முன்னேற்றத்திற்கு தகுதியுற்ற நாடாகும். அந்நாட்டு மக்களே வயிற்று வாழ்வு என்னும் முதற்படியிலிருந்து கலை வாழ்வு என்னும் இரண்டாம் படிக்கும் உயர் வல்லவர். ஏனையோர் கலை கலை என்று முழங்குதல் ஆரவாரமே அன்றிச் சிறிதும் பயன்படாதது. இரண்டாம் நிலை உற்ற மக்கள் வயிற்றுக்கவலை அற்றவராய் புலன்களுக்குச் சிறந்த விருந்து தேடி அவற்றின் வாயிலாக இன்பம் பெற முயல்வர். கண்ணுக்கு இனிய காட்சியாக ஓவியம், சிற்பம், நாடகம் முதலியன தேடுவர். செவிக்கு இனிய விருந்தாக இசை, காவியம், கதை முதலியன நாடுவர். அவ்வாறே மற்றப் புலன்களுக்கும் ஏற்ற விருந்து விழைந்து தேடுவர். அந்நிலையில் கலை வளர்ச்சியே மக்களின் வாழ்க்கையாக அமையும்

(10 புள்ளி)

The National e-Learning Portal for The General Education

ஆ) **பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

கல்வி நமக்குப் பல நன்மைகளைத் தருகின்றது. கல்வியினால் நம் அறிவு வளர்கிறது. கல்வியால் நாம் தொழில் பெறுகிறோம். கற்றவர்களை உலகம் மதிக்கிறது. எல்லாவற்றிலும் மேலாகக் கல்வி நமக்குக் கடவுள் உண்மையை அறிவுறுத்தி, நாம் கடவுளை அடையத்துணை செய்கிறது. கடவுளை வணங்கத்துணை செய்யாத கல்வி சிறந்த கல்வியாகாது "கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவான் நற்றாள் தொழாஅர் எனின்" என்பர் திருவள்ளுவர். கல்வியின் மூலம் கடவுளின் குண விசேடங்களையும், அவரை அடைந்தோர் வரலாறுகளையும் அறிகிறோம். அவ்வாறு அறிவதனால் நமக்கு கடவுளிடத்தில் அன்பு உண்டாகின்றது. அவ்அன்பு கடவுட்பணியில் நம்மை ஈடுபடுத்துகின்றது. கடவுட் கொள்கை இல்லாதவர்கள், கல்வியினால் கடவுள் நம்பிக்கையைப் பெறுகிறார்கள். கடவுட் கொள்கையுள்ளவர்கள், கல்வியினால் சமய வாழ்வின் ஊக்கம் அடைகின்றார்கள்.

கல்வியைப் போலவே கடவுட் கொள்கையைப் பெறுவதற்கும் இளமைப்பருவமே ஏற்ற காலமாகும். இளமையிற் பழகிய பழக்கங்கள் எக்காலத்துக்கும் நிலைத்து நிற்கும். "தொட்டிலிற் பூண்ட குணம் சுடுகாடு மட்டும்" ஆதலினால் நமது பழக்கவழக்கங்களைச் சிறுவயதிலேயே திருந்தியனவாகக் கற்றுக் கொள்ள வேண்டும் . கடவுள் நம்பிக்கையையும் கடவுள் தொண்டையும் இளமையிலேயே போதித்தால், அ∴து ஒருவரது வாழ்க்கை முழுவதும் கலந்து நிற்கும் வாழைப்பழத்தில் இலகுவாக ஊசி ஏற்றுதல் போல சிறுவர் மனதிலும் கடவுள் நம்பிக்கை நன்கு பதியும் அவ்வாறே நற்பழக்கங்களையும் இளமையில் பழகிக் கொள்ளுதல் எளிதான காரியமாகும். இளமையிற் கற்றுக் கொள்ளாது வயது வந்த பின் நற்பழக்கங்கள் மேற்கொள்ளலாமெனல் பொருந்தாது.

(i) கல்வியினால் உண்டாகும் நன்மைகள் எவை?

(ii) வள்ளுவர் கல்வி பற்றிக் கொண்ட கருத்து யாது?

(iii) கல்வியைக் கற்க ஏற்ற காலம் யாது?

(iv) கல்விக்கும் கடவுளுக்கும் உள்ள தொடர் யாது?

(v) ஆசிரியரின் மொழி நடைபற்றிக யாது கூறுவீர்?

(2x5=10 புள்ளி)

03) **பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிவு செய்து 300 – 350 சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.**

அ. பூகோளமயமாதல்

ஆ. தமிழ் ஒரு பல் பண்பாட்டு மொழி

இ. ஊடக சுதந்திரம்

ஈ. நீர் இன்றி அமையாது உலகு

உ. எண்ணெழுத்திகழேல்

(20 புள்ளி)

## பகுதி – II

### பிரிவு – அ

**04)** அ. சங்கமருவிய காலத்தில் அறநூல்கள் தோன்றுவதற்கான காரணமாக இருந்த காரணிகளை விளக்குக?

ஆ. சங்கமருவிய கால இலக்கியப் பண்பிலிருந்து சங்ககால இலக்கியப் பண்பு வேறுபடுமாற்றை விளக்குக.

இ. சங்க மருவிய காலத்தை பக்தி நெறியின் ஊற்றாக கொள்ளலாமா? ஆராய்க?

(15 புள்ளி)

**05)** அ. பல்லவர் கால வைஷ்ணவ பக்தி இலக்கிய மரபில் ஆழ்வார்களின் பங்களிப்பை விளக்குக.

ஆ. அக்காலத்தில் எழுந்த பக்தி சாரா இலக்கியங்களை எடுத்துக் காட்டி விளக்குக.

இ. பல்லவர் கால பக்தியில் அகத்திணை பெறும் இடத்தினை தெளிவு படுத்துக.

(15 புள்ளி)

**06)** அ. நாயக்கர் கால இலக்கியங்களின் பொதுப் பண்புகளை விளக்குக.

ஆ. இக்காலத்தில் தோன்றிய பிரபந்தங்கள் பற்றி கருத்துரைக்க.

இ. அக் காலத்தில் எழுந்த பொது மக்கட் சார்பான இலக்கியங்கள் பற்றி சுருக்கமாக விளக்குக?

(15 புள்ளி)

### பிரிவு – ஆ

**07)** அ. ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் தோன்றிய இலக்கியங்களை வகைப்படுத்திக் காட்டுக.

ஆ. அவற்றின் பண்புகளை விளக்குக.

(15 புள்ளி)

**08)** பின்வருவனற்றுள் எவரேனும் மூவரின் இலக்கியப் பங்களிப்பை மதிப்பிடுக.

அ. பாவலர் துரையப்பாபிள்ளை

ஆ. பேராசிரியர் க.கணாதிப்பிள்ளை.

இ. முகம்மது காசிம் சித்திலெப்பை

ஈ. வ. அ. இராசரத்தினம்

உ. டொமினிக் ஜீவா

(15 புள்ளி)

The National e-learning Portal for The General Education